
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1078

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

155

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...












# உலகம் உங்கள் கையில்!

## கருவிகளோடு கனவுகளும் தரும் அரசு!

**க**ல்வி, வேலைவாய்ப்பு ஆகியவை இன்று பெருமளவில் தொழில்நுட்பத்தைச் சார்ந்தே உள்ளன. அந்தப் புதிய சவாலில் தமிழ்நாட்டு மாணவர்கள், குறிப்பாக பொருளாதாரரீதியாகவும் சமூகரீதியாகவும் பின்தங்கிய மாணவர்கள் தேங்கிவிடக் கூடாது என்பதற்காகவும், சம வாய்ப்புகள் பெற்று முன்னேற வேண்டும் என்பதற்காகவும், நம் திராவிட மாடல் அரசு உருவாக்கிய திட்டம்தான் **'உலகம் உங்கள் கையில்.'**

2025-26ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்போது நமது அரசு வெளியிட்ட அறிவிப்புகளில், உலகெங்கும் செயற்கை நுண்ணறிவு பெரும் தாக்கத்தை உருவாக்கி வருகிறது. அதற்கேற்ப, நமது மாணவர்களின் தொழில்நுட்ப அறிவையும் அவர்களின் தனித்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் தொடர்ந்து வழங்கிடவேண்டிய வரலாற்றுச் தேவை தற்போது எழுந்துள்ளது. அதனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டின் பல்வேறு கலை, அறிவியல், பொறியியல், வேளாண்மை மற்றும் மருத்துவம் உள்ளிட்ட அனைத்து கல்லூரிகளிலும் பயின்றுவரும் மாணவர்களுக்கு உயர்தொழில்நுட்பச் சாதனங்களை வழங்கிடத் திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக, அடுத்த இரண்டு ஆண்டுகளில் 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக, இந்நிதியாண்டில் 2,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்கிற அறிவிப்பினை வெளியிட்டது.

அந்த அறிவிப்பின்படி, மாணவர்கள் நவீன உலகின் தேவைகளுக்கு ஏற்ப டிஜிட்டல் திறன் பெறும் வகையில், 'உலகம் உங்கள் கையில்' எனும் ஒருங்கிணைந்த ஒரு எதிர்காலத் திட்டத்தினைத் தொடங்கியது நம் அரசு.

### 20 லட்சம் மடிக்கணினிகள்

ஜனவரி 5-ஆம் தேதி, சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில், உயர்கல்வித் துறை சார்பில் நடத்தப்பட்ட நிகழ்ச்சியில், திராவிட மாடல் நாயகர் நம் முதலமைச்சர் அவர்கள் திட்டத்தினைத் தொடங்கிவைத்து, 20 இலட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் பணிகளையும் தொடங்கிவைத்தார். இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ள இந்தத் திட்டத்தில், முதற்கட்டமாக 10 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குவதைத் தொடங்கி வைத்தார்.

நவீன உலகின் தேவைகளுக்கு ஏற்ப மாணவர்கள் மின்னணு தொழில்நுட்பத்திறன் பெற, 'உலகம் உங்கள் கையில்' திட்டம் ஒருங்கிணைந்த வகையில் செயல்படுத்தப்படும். அந்தத் திட்டத்தின்கீழ், கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர் 20 லட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டம், மாநிலம் முழுவதும் இரண்டு கட்டங்களாக நிறைவேற்றப்படும். அதன் முதற்கட்டமாக, 10 லட்சம் மடிக்கணினிகள் மாவட்டம்தோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

எதிர்கால இலக்குகள் அடிப்படையில் கல்லூரி மாணவர்களுக்கான திட்டமாகச் செயல்படுத்தப்படும். அந்த வகையில், 'உலகம் உங்கள் கையில்' திட்டத்தின் கீழ், கல்லூரி மாணவர்கள் பயனாளிகளாக இருப்பர்.

### உலகத் தரத்தில்

மாணவருக்கு வழங்கப்படும் மடிக்கணினிகள் உயர் தொழில்நுட்பங்களுடன் DELL, ACER, HP என முன்னணி நிறுவனங்களில் இருந்து பெறுவதற்கு தமிழ்நாடு அரசு ஒப்பந்தம் செய்தது.

குறிப்பாக, இந்த மடிக்கணினிகளில் Intel i3 / AMD Ryzen 3 Processor, 8 GB RAM, 256 GB SSD நினைவகம், Windows 11 Home Strategic மற்றும் BOSS Linux OS ஆகிய மென்பொருள்கள் நிறுவப்பட்டுள்ளன.

இவை தவிர, நடைமுறையில் உள்ள கல்வி மற்றும் திட்டப் பணிகளுக்காக MS Office 365 செயலியும் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டதுபோல செயற்கை நுண்ணறிவு மென்பொருளான Perplexity Pro செயலியும், ஆறு மாத சந்தாவும் கட்டணமில்லாமல் வழங்கப்பட்டுள்ளது.

மாணவரின் ஆதார் அட்டை, 10 மற்றும் 12-வது மதிப்பெண் பட்டியல், குடும்ப வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சேர்க்கைச் சான்று, வங்கி பாஸ்புக், பாஸ்போர்ட் அளவு புகைப்படம், தொலைபேசி எண், இருப்பிடச் சான்றிதழ் ஆகிய ஆவணங்களைக் கொண்டு விண்ணப்பிக்க வேண்டும்.

அந்தந்தக் கல்லூரிகளே மாணவர்களைத் தேர்வுசெய்கின்றனர்.

> **நமது மாணவர்கள் மதிப்புமிக்க மனிதர்களாக, பெருமைமிக்க தமிழர்களாக உயர்ந்து நிற்க வேண்டும் என்பதுதான் நோக்கம். ஆகவே, இந்த மடிக்கணினி வெறும் கருவி மட்டுமல்ல; உலகை வெல்லும் திறவுகோல்.**

நான் முதல்வன் பயிற்சி குறித்த தகவல்கள் அடங்கிய தொகுப்பு, தமிழி செயலி, பொருநை - கீழடி வரலாறு, உயர்வுக்கு படி என்கிற தொகுப்புகள், சிறு தொழில் தொடங்குவதற்கான வழிகாட்டுதல் - பயிற்சி குறித்த தகவல்கள், பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான செயலி ஆகியவற்றையும் மடிக்கணினியில் வைத்து கொடுத்திருக்கிறது அரசு.

### கனவுகளும் புகட்டுகிறோம்

உலகம் உங்கள் கையில் திட்டத்தின் தொடக்க விழா நிகழ்ச்சிகளோடு, நந்தம்பாக்கம் வர்த்தக வளாகத்தில், தமிழக மாணவர்கள் உருவாக்கிய புதுமைப் படைப்புகள், பல்வேறு துறைசார்ந்த நிறுவனங்களின் தயாரிப்புகள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு முன்னெடுப்புகளின் கண்காட்சியும் நடைபெற்றது.

ட்ரோன் தொழில்நுட்பங்கள், அவற்றைப் பரிசோதிக்கும் மையங்கள், ஆளில்லா ட்ரோன்கள், தொலை உணரி (ரிமோட் சென்சார்), வனங்களில் காட்டுயிர்களின் நடமாட்டத்தைக் கண்காணிப்பதற்கான ட்ரோன் தொழில்நுட்பங்கள், நவீன வரைபடங்கள், திரும்பப் பெறக்கூடிய மற்றும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய தன்னிறைவான விண்கலத் தொழில்நுட்பம், இஸ்ரோ தொழில்நுட்பத்தை உட்படுத்திய பல்வகைச் செயற்கைக்கோள் பரிசோதனை முயற்சிகள், மின் வாகனங்கள், பலூன் ராக்கெட், ரோபோட்டிக் தொழில்நுட்பங்கள் எனப் பல்வேறு அறிவியல் துறைகள் சார்ந்த 40 அரங்குகள் இடம்பெற்றன. இதன் மூலம் மாணவர்களின் எதிர்கால இலக்குகள் அடையாளம் காட்டப்பட்டன.

நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர் அவர்கள், 'நமது மாணவர்கள் மதிப்புமிக்க மனிதர்களாக, பெருமைமிக்க தமிழர்களாக உயர்ந்து நிற்க வேண்டும் என்பதுதான் நோக்கம். ஆகவே, இந்த மடிக்கணினி வெறும் கருவி மட்டுமல்ல; உலகை வெல்லும் திறவுகோல்' எனத் தெளிவுபடுத்தினார்.

**கருவிகளோடு கனவையும் புகட்டுகிறது திராவிட மாடல் அரசு. உலகை வெல்லட்டும் தமிழ்நாட்டு மாணவர்கள்!**

**...சாதனை தொடரும்**

## ஐ.சி.யூ.வில் ஜனநாயகம்!

2014-ஆம் ஆண்டு பா.ஜ.க. ஒன்றியத்தில் ஆட்சிக்கு வந்தது முதல் இந்திய ஜனநாயகத்தை எப்படியெல்லாம் சிதைத்து வருகிறது என்பதை 'ஐ.சி.யூ.வில் ஜனநாயகம்' என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார் தி.மு.கழக செய்தித்தொடர்புத் துணைச் செயலாளர் மருத்துவர் ஹபிசுல்லா. நாடாளுமன்றம், தேர்தல் ஆணையம், அமலாக்கத்துறை, கல்வித்துறை, ஊடகங்கள் எப்படியெல்லாம் சிதைக்கப் பட்டிருக்கிறது என்பதையும், தனியாருக்கு தாரைவார்க்கப் பட்ட பொதுத்துறை நிறுவனங்கள், மணிப்பூர் கலவரம், ஆட்சிக்கலைப்புகள், புல்வாமா முதல் சிந்தூர் வரையிலான எல்லைப் பிரச்னைகளில் பா.ஜ.க.வின் செயல்பாடுகள் என அடுக்கடுக்கான ஆதாரங்களோடு பா.ஜ.க.வின் ஆட்சி செய்த அலங்கோலங்களை 12 தலைப்புகளில் விவரித்துள்ளார்.



சவுத் சென்ஸ் பதிப்பகம் வெளியிட்டுள்ள இந்நூலை, தமிழ்நாடு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார். இந்நூல் குறித்து, சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள த.மு.எ.க.ச. துணைத்தலைவர் ஆதவன் தீட்சண்யா,

"இந்த நூல் மிகுந்த பொறுப்புணர்வுடனும் அரசியல் தெளிவுடனும் சான்றுகளுடனும் எழுதப்பட்டுள்ளது. பா.ஜ.க. ஆட்சி இந்தியாவின் தன்னாட்சியுள்ள அரசியல் சாசன அமைப்புகளை எப்படி சீரழித்துள்ளது, ஜனநாயகப் போர்வையிலேயே மோடி எப்படி ஒரு சர்வாதிகார ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதை, அம்பலப்படுத்தும் இப்புத்தகம் தலைப்பிலிருந்து விலகாமல் பேசுகிறது. மோடி ஆட்சி நீதித்துறையையும் எப்படி சீரழித்துள்ளது என்பதையும் ஒரு பகுதியாக எழுதி அடுத்த பதிப்பில் சேர்த்தால் இந்த ஸ்கேன் ரிப்போர்ட் இன்னும் முழுமையடையும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை புத்தகக் காட்சியில் நிமிர்வோம், திரவிடியன் ஸ்டாக், சீர் வாசகர் வட்டம், கருஞ்சட்டை, கருப்புப் பிரதிகள், கலப்பை, அகநி அரங்குகளில் இந்நூல் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. நூலின் விலை ரூ.120. நூல் பெற 99405 95559 இந்த எண்ணுக்கும் தொடர்பு கொள்ளலாம்.

## ஃப்ளாஷ்பேக்



### பிறந்தநாளில் தலைவரிடம் வாழ்த்து!



இரா.கதிரவன்

2010-ஆம் ஆண்டு அக்டோபர் 3-ஆம் தேதி எனது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை சித்தரஞ்சன் சாலை இல்லத்தில், அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத்தலைவர் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். அப்போது, ஆயிரம்விளக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளராக இருந்தேன். என் வாழ்நாளில் பொற்காலமாக அமைந்த புகைப்படம்.

**– இரா.கதிரவன்,**
**110 (அ) வட்டத் துணைச் செயலாளர்,**
**ஆயிரம்விளக்கு மேற்குப் பகுதி, சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### 'தமிழ்நாடுதான் எனது களம்'!

1969-இல் எதிர்க்கட்சிகளின் குடியரசுத் தலைவர் வேட்பாளரைத் தேர்வு செய்ய துவிவேதி, சரண்சிங், வாஜ்பாய், மசானி, ஜார்ஜ் பெர்னாண்டஸ் உள்ளிட்டோர் கூடி ஆலோசித்தனர். கலைஞர், சி.டி.தேஷ்முக் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன. இதுகுறித்து பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர். "அகல உழுவதைவிட ஆழ உழுவதைத்தான் ஒரு விவசாயி விரும்புவான். தமிழ்மொழியும் திராவிட இனமும் சார்ந்த தமிழ்நாடுதான் எனது அரசியல்களம்" எனக் கூறிவிட்டார் கலைஞர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131